செய்தி வெளியீடு எண்.153 நாள்.29.2.2008

## தமிழ்நாட்டில் எண்ணெய்ப்பனை சாகுபடி விரிவாக்கம்

எண்ணெய் பனை ஒரு ஆண்டிற்கு ஒரு எக்டரில் 4 முதல் 6 டன்கள் வரை எண்ணெய் கொடுக்கக்கூடிய ஒரு மரப்பயிராகும். எனவே உணவு எண்ணெய்யில் தன்னிறைவு அடையவும், உணவு எண்ணெய் இறக்குமதி அந்நிய செலவாணியை குறைக்கவும், எண்ணெய்ப்பனை பயிரை தமிழகத்தில் பரவலாக்கம் செய்ய அரசு திட்டமிட்டு எண்ணெய்ப்பனை மேம்பாட்டு திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. தமிழ்நாட்டில் அதிக வருவாய் தரக்கூடிய எண்ணெய்ப்பனை சாகுபடி திட்டம் ஏற்கெனவே திருச்சி, கரூர், பெரம்பலூர், தஞ்சாவூர், திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில் வேளாண்மைத்துறையும் காவேரி பாமாயில் நிறுவனமும் இணைந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2006–07 முடிய 5341 எக்டர் பரப்பில் பாமாயில் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில் சுமார் 3000 எக்டர் பரப்பில் இத்திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. விவசாயிகளிடம் கொள்முதல் செய்யப்படும் பழக்குலைகளுக்கு டன் ஒன்றுக்கு ரூ. 3270 வீதம் அரசு விலை நிர்ணயம் செய்துள்ளது. காவேரி பாமாயில் நிறுவனம் தற்சமயம் ரூ. 3500/– மெட்ரிக் டன் விலைக்கு கொள்முதல் செய்து வருகின்றது. மேலும் இந்நிறுவனம் தமிழ் புத்தாண்டான 15.1.2008 முதல் டன் ஒன்றுக்கு ரூ. 4000/– வீதம் கொள்முதல் செய்து வருகிறது. பெரம்பலூர் மாவட்டத்தில் வாரணவாசி பகுதியில் மணிக்கு 2.5 டன் வீதம் பழத்திலிருந்து எண்ணெய் பிழியும் பாமாயில் ஆலை அமைக்கப்பட்டுள்ளது.

எண்ணெய்ப்பனை பயிரை 1 எக்டரில் பயிரிட ரூ.15,000 வரை செலவினமாகும். நன்றாக பராமரிப்பு செய்யப்பட்ட பயிரில் 1 எக்டரில் குறைந்த பட்சம் 20-25 டன் பழக்குலைகள் அறுவடை செய்யப்பட்டு நிகர லாபமாக ரூ.20,000 முதல் ரூ.30,000 வரை பெறலாம்.

விவசாயிகளுக்கு கூடுதல் வருவாய் அளிக்கக் கூடிய இந்த நல்ல பயனுள்ள திட்டம் விவசாயிகளின் நலன் கருதி மேலும் சில மாவட்டங்களுக்கு தனியார் நிறுவனம் மூலம் விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது. அதன்படி கடலூர், விழுப்புரம் மாவட்டத்திற்கு காவேரி பாமாயில் நிறுவனமும், வேலூர் மாவட்டத்திற்கு வைதேகி நிறுவனமும், தேனி மாவட்டத்திற்க ருசி சோயா நிறுவனமும், திருநெல்வேலி மாவட்டத்திற்கு கோத்ரேஜ் நிறுவனமும் தூத்துக்குடி மாவட்டத்திற்கு உணவு, கொழுப்பு மற்றும் உர நிறுவனமும் இத்திட்டத்தினை செயல்படுத்த அரசாணை வெளியிடப்பட்டு மாண்புமிகு வேளாண்துறை அமைச்சர் அவர்கள் முன்னிலையில் 29.2.2008 அன்று காலை 10 மணி அளவில் வேளாண்மை ஆணையர் மற்றும் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டுள்ளது.

மேலும் இந்நிறுவனங்கள் விவசாயிகளிடம் ஒப்பந்த பண்ணையம் முறையில் எண்ணெய்ப்பனை பயிரை பரவலாக்கம் செய்யவும் தொகுப்பு பண்ணையாக 100 எக்டரில் குறைந்த பட்சம் 2 கிமீ பரப்பில் உருவாக்கவும் திட்டமிட்டுள்ளனர். மேலும் ஒரு மணிக்கு 2.5 டன் எண்ணெய்ப்பனை பிழிதிறன் கொண்ட ஆலையை மூன்று வருடத்திற்குள் நிறுவ திட்டமிட்டுள்ளனர். அரசு தெரிவித்துள்ள நிபந்தனைகளை ஏற்று பிணையத் தொகையாக ரூ.10 லட்சம் வங்கி உத்தரவாதம் வழங்க ஒப்புக்கொண்டுள்ளனர். வரும் ஐந்தாண்டுகளில் இம்மாவட்டங்களில் 20,500 எக்டர் பரப்பில் எண்ணெய்ப்பனை பயிரை பரப்பு விரிவாக்கம் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

எனவே, இம்மாவட்ட விவசாயிகள் வேளாண் விரிவாக்க மையங்களில் தொடர்பு கொண்டு தேவையான தொழில் நுட்பம் மற்றும் மான்ய உதவியினை பெற்று எண்ணெய்ப்பனை சாகுபடி செய்து பயனடைய கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

வெளியீடு: இயக்குநர் செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.